18—வது வார்டில் அமைத்துத் தரும்படி, எங்களுடைய மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களிடத்திலும், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கையாகக் கொடுத்திருக்கிறேன். இரண்டு மாண்புமிகு அமைச்சர்களும் அருள்கூர்ந்து, அந்த இடத்தில் ஆரம்ப சுகாதார நிலையத்தை அமைத்துத் தரும்படி தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. மா. சுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சிப் பகுதியில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். அவ்வாறு எதுவும் அறிவிக்கப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கான அனுமதியை ஒன்றிய அரசிடம் கேட்டுப் பெற்றிருக்கிறார்கள். இந்த 25 நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களை எந்தெந்த மாநகராட்சிப் பகுதிகளில் அமைப்பது என்பது குறித்த கருத்துக் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவ்வாறு அமைக்கப்படும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'வேண்டாம்' என்று தெரிவித்த இடத்தில் அமையாமலும், அவர் 'வேண்டும்' என்று தெரிவித்த இடத்தில் அமைவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 128, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

128—

அன்னதானக் கூடம்

***4292—திரு. பால் மனோஜ் பாண்டியன்:**

மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2022 ஏப்ரல் 19]

(அ) ஆலங்குளம் தொகுதி, கடையம் ஒன்றியம், கீழக்கடையம் கிராமம், அருள்மிகு பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் அன்னதானக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் இந்த ஆண்டு அன்னதானக் கூடம் அமைக்கப்பட்டு, அன்னதானத் திட்டத்தின்கீழ் அந்தத் திருக்கோயில் எடுத்துக்கொள்ளப்படும். அதோடுமட்டுமல்லாமல், 2008 ஆம் ஆண்டு அந்தத் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. அந்தத் திருக்கோயிலுக்குண்டான திருப்பணிகளும் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்பட்டு, குடமுழுக்கு நடத்தித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் அன்னதானத் திட்டம் என்ற உன்னதமானத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 752 திருக்கோயில்களுக்கு அந்தத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டது. நான், மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புவது, இந்த அன்னதானத் திட்டத்தின்கீழ் தற்போது எத்தனை கோயில்கள் பயன்பெறுகின்றன, அன்னதானத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உணவு தரமான உணவாக இருப்பதற்கு ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் யாரால் கொண்டுவரப்பட்டது என்ற முக்கியத்துவத்தைவிட, அந்தத் திட்டம் மேலும் தரமாக, மக்களுக்குப் பயனுள்ள திட்டமாக மாற்றப்படுவது யாருடைய ஆட்சிக் காலத்தில் என்றால், அது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தத் திட்டம் 754 திருக்கோயில்களில் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. நாளொன்றுக்கு 75,000 பக்தர்கள் இந்தத் திட்டத்தின்கீழ் உணவருந்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே அதிக திருக்கோயில்களுக்கு, 341 திருக்கோயில்களுக்கு ஒன்றிய அரசால் வழங்கப்படுகின்ற உணவுத் தரக் கட்டுப்பாட்டின்கீழ் BHOG சான்றிதழ் பெற்ற ஒரே மாநிலம் மாண்புமிகு தளபதி அவர்களுடைய தலைமையில் இயங்கிக் கொண்டிருக்கும் தமிழகம்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த ஆட்சிக் காலத்தில் இரண்டு கோயில்களில் முழு நேர அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. அவற்றில் ஒன்று, பழநி திருக்கோயில்; மற்றொன்று, ஸ்ரீரங்கம் திருக்கோயில் ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்துகின்ற நோக்கத்தோடு, அண்மையில் திருச்செந்தூர், சமயபுரம் மற்றும் திருத்தணி ஆகிய மூன்று திருக்கோயில்களில் தரமான, முழு நேர அன்னதானத் திட்டத்தைத் துவக்கி, பக்தர்களின் பக்திப் பசியையும், வயிற்றுப் பசியையும் போக்கினார்; அத்தகைய முதல்வர் ஒருவர் உண்டென்றால், அவர் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் என்பதை நிரூபிக்கின்ற வகையில் இரண்டு திருக்கோயில்களில் செயல்படுத்தப்பட்டு வந்த முழு நேர அன்னதானத் திட்டத்தை ஐந்து திருக்கோயில்களுக்கு விரிவுபடுத்தியிருக்கிறார் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள்.

திரு. பால் மனோஜ் பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாப்பான்குளம் கருத்தீஸ்வரர் சமேத அழகம்மாள் திருக்கோயில் மற்றும் பாப்பாக்குடி ஒன்றியத்தில்

2022 ஏப்ரல் 19]

அமைந்துள்ள அருள்மிகு திருக்கடுகை மூன்றீஸ்வரர் திருக்கோயில், வல்லக்கால் புதுக்குடி நதிக்கரையில் அமைந்துள்ள ஸ்ரீதேவி சமேத வெங்கடாசலபதி பெருமாள் திருக்கோயில், பூலான்குளம் ஸ்ரீஉச்சிமாகாளி திருக்கோயில் மற்றும் முக்கூடல் பேரூராட்சியில் உள்ள பாண்டியாபுரம் முப்பிடாதியம்மன் கோயில் ஆகிய திருக்கோயில்களில் பல ஆண்டுகாலம் கும்பாபிஷேகம் நடைபெறாத சூழ்நிலை இருக்கிறது.

முற்பகல் 11–05

அதேபோன்று அத்திருக்கோயில்களைப் பராமரிக்காத ஒரு சூழ்நிலையும் இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோயில் நிலங்களை வேகமாக மீட்டெடுப்பதுபோல், திருக்கோயில் கும்பாபிஷேகத்தையும், அதன் திருப்பணிகளையும், வேகமாக இந்த ஆண்டே செயல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த 5 திருக்கோயில்களில் மூன்றீஸ்வரர் திருக்கோயில் திருப்பணிகள் 21–3–2022 அன்று மேற்கொள்ளப்பட்டு, பாலாலயம் முடிவுபெற்று, தற்போது பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதேபோன்று, நெல்லையப்பர் திருக்கோயில் கடந்த 7–7–2021 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவோடு, கள ஆய்வு செய்யப்பட்டது. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த ஆய்வில் பங்கேற்றிருந்தார். சுமார் 6 கோடியே 21 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, மண்டலக் குழுவின் பரிந்துரையுடன் தொல்லியல் குழுவின் பரிந்துரைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றது. இந்த ஆண்டே அந்தத் திருப்பணி மேற்கொள்ளப்படும். அதேபோன்று மற்றொரு திருக்கோயிலான முன்றீஸ்வரர் திருக்கோயிலுக்கு அடுத்து வருகின்ற கீழப்பாவூர் திருக்கோயில் என்பது, கிராமப்புற திருக்கோயில்கள் திட்டத்தின்கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு, இந்த ஆண்டே அந்தக் கோயிலின் திருப்பணிகளும் துவக்கப்படும். மீதமிருக்கின்ற இரண்டு திருக்கோயில்கள் சம்பந்தமாக இந்த ஆண்டின் மானியக் கோரிக்கையில் அறிவிக்கப்பட்டு வருகின்ற ஆண்டே இத்திருக்கோயில்களின் திருப்பணிகளும் மேற்கொள்ளப்படும்.

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற 7–5–2021 தொடங்கி இதுநாள்வரையில், சுமார் 666 திருக்கோயில்களின் திருப்பணிகள் 844 கோடி ரூபாய் செலவில் மேற்கொண்டிருக்கின்ற ஓர் ஆன்மிக அரசு, மாண்புமிகு தமிழக முதல்வர் தலைமையில் அமைந்திருக்கின்ற அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், திருக்கோயில்களின் திருப்பணிகள் ஏதேனும் மேற்கொள்ள வேண்டியிருந்தால், பட்டியல் தாருங்கள், அவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அனுமதியோடு விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன் அவர்கள்.

திரு. நா. இராமகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கம்பம் தொகுதியில் சின்னமனூரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு பூலாநந்தீஸ்வரர் உடனுறை சிவகாமி அம்மன் திருக்கோயில் முக்தி தரும் தலமாகும்; எட்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டது; திருத்தேர் உண்டு. அதேபோன்று உத்தமபாளையத்திலுள்ள ஞானாம்பிகை திருக்கோயில் 17 ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. ராகு–கேது பரிகார ஸ்தலம். அதேபோன்று, கம்பம் தொகுதியில் எழுந்தருளியுள்ள காசி விசுவநாதர் திருக்கோயிலில் ஒரே வளாகத்தில் பெருமாள் கோயிலும், சிவன் கோயிலும் அமைந்துள்ளன. இந்த மூன்று திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு வைபவம் நடைபெற்று, 16 ஆண்டுகளுக்கும் மேலாகின்றது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவ்வாண்டே அந்த 3 திருக்கோயில்களுக்கும் குடமுழுக்கு வைபவம் நடத்துகின்ற அந்த ஏற்பாட்டினையும், மேலும் இம்மூன்று திருக்கோயில்களுக்கும் திருமண மண்டபம் மற்றும் யாத்ரி நிவாஸ் கட்டுவதற்கும் உரிய நடவடிக்கைகளை எடுப்பாரா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல்,

2022 ஏப்ரல் 19]

1000 ஆண்டுகளுக்குமேல் பழமையான திருக்கோயில்களைப் புனரமைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற அந்த 3 திருக்கோயில்களின் பட்டியலை ஏற்கெனவே இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையிடம் கொடுத்திருக்கின்றார். அக்கோயில்களில் கள ஆய்வு மேற்கொண்டபோது, பக்தர்கள் தங்கும் விடுதி கட்டுவதற்குண்டான சாத்தியக்கூறு அந்த உத்தமபாளையம் திருக்கோயிலில் இல்லை. அவர் குறிப்பிட்ட இந்த 3 திருக்கோயில்களிலும் இந்த ஆண்டே திருப்பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். அதோடுமட்டுமல்லாமல். . . (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் ஏதோ கேட்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே எடுத்தாயிற்று என்று சொன்னார்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு அவற்றில் உத்தமபாளையம் திருக்கோயில் மட்டும்தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. மீதம் இருக்கின்ற இரண்டு திருக்கோயில்கள் இந்த ஆண்டே எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் திருமண மண்டபம் கோரியிருக்கிறார். அவற்றையும் கள ஆய்வு செய்து, சாத்தியக்கூறுகள் இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுடன் இந்த ஆண்டே அதன் பணிகளை மேற்கொள்வதற்குண்டான பணிகள் துவக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி அவர்கள்.*

திருமதி எஸ். தேன்மொழி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதியில் நிலக்கோட்டை நகரின் மத்தியில் சமீன் கூளப்ப நாயக்கர் அவர்களால் ஆந்திர மாநிலத்திலிருந்து பிடி மண் எடுத்துவரப்பட்டு கட்டப்பட்ட ஸ்ரீ அஹோபில நரசிம்மர் கோயில் மிகப் பழமை வாய்ந்த திருக்கோயில் ஆகும். அந்தத் திருக்கோயிலைப்*

புனரமைத்து, குடமுழுக்கு செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்கு அஹோபில நரசிம்மருடைய ஆசி முழுமையாக இருப்பதால், இந்த ஆண்டே அந்தக் கோயிலினுடைய திருப்பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 129, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

129—

காலிப் பணியிடங்களை நிரப்புதல்

***1965—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் சார் கருவூலத்தில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு முனைவர் பழனிவேல் தியாக ராஜன், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) கருவூலக் கணக்குத் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பும்பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்